**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.46/2021**
**Prosecution Witness**:7

| Name | Thiru.Varatharajan (PW 7) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of January 2026** by V.Nivedha, Assistant DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்சமயம் ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.03.2021ம் தேதியன்று அதிகாலை 03.00 மணிக்கு நான் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சிவா வயது 30, த/பெ.ஜெயராஜ் 120பி, தெற்கு தெரு, பாண்டமங்களம் அஞ்சல், பரமத்திவேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று மலையம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.85/2021 ச/பி.279, 337 இதச ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னிட்டு 30.03.2021ம் தேதி அதிகாலை 05.10 மணிக்கு விபத்தில் காயம்பட்டு ஈரோடு லோட்டஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஜெயராஜ் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 304(A) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு

கோப்பை மேல் விசாரணைக்காக மலையம்பாளையம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். என்னை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பு) :–**

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், புகார் பெறப்படவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை உயர்அதிகாரிக்கு அனுப்பிவைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:26:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.